**ஜூன் – 19**

# TNPSC துளிகள்

- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் C-295 ராணுவப் போக்குவரத்து விமானம் ஆனது குஜராத்தின் வதோதராவில் தனது முதல் சோதனை ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்தது.
    - நடுத்தர அளவிலான தந்திரோபாய ராணுவப் போக்குவரத்து விமானமான C-295 துருப்புக்கள் மற்றும் தளவாடங்களைக் கொண்டு செல்லவும், மனிதாபிமான மற்றும் பேரிடர் மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது.
- E100 (100% எத்தனால் கலவை) எரிபொருளுக்கு இந்தியா முழுமையான சட்டப்பூர்வ அங்கீகாரத்தை வழங்கியுள்ளது, இது நெகிழ்வு-எரிபொருள் வாகனங்களை (FFVs) அறிமுகப்படுத்தப்படுவதற்கு வழிவகுக்கிறது.
    - எத்தனால் கலவை என்பது தூய்மையான மற்றும் அதிக நீடித்த எரிபொருளை உற்பத்தி செய்வதற்காக பெட்ரோலுடன் எத்தனாலைக் கலக்கும் செயல்முறை ஆகும்.
- பிரதமர் நரேந்திர மோடி ஸ்லோவாக்கியாவிற்கு பயணம் மேற்கொண்டார் என்ற நிலையில் இது 1993 ஆம் ஆண்டில் அந்நாடு சுதந்திரம் அடைந்த பிறகு இந்தியப் பிரதமர் ஒருவர் அங்கு மேற்கொள்ளும் முதல் பயணமாகும்.
    - இந்தியாவும் ஸ்லோவாக்கியாவும் 1993 ஆம் ஆண்டில் தூதரக உறவுகளை ஏற்படுத்திக் கொண்டன. மேலும் வர்த்தகம், முதலீடு, புத்தாக்கம், வாகன உற்பத்தி, ரயில்வே மேம்பாடு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவை குறித்து விவாதித்தன.
- INS Agray எனப்படும் அர்னாலா-வகுப்பைச் சேர்ந்த ஐந்தாவது நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு ஆழமற்ற நீர் போர் கப்பல் (ASW SWC), கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் ஷிப்பில்டர்ஸ் & இன்ஜினியர்ஸ் (GRSE) நிறுவனத்தால் இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்கப் பட்டது.
- டெல்லி-மும்பை விரைவுச்சாலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ராஜஸ்தானில் உள்ள முகுந்திரா மலைப் புலிகள் காப்பகத்தின் கீழ் இந்தியாவின் முதல் 8-வழி சுரங்கப் பாதை 2026 ஆம் ஆண்டு ஜூன் 20 அன்று திறக்கப்பட உள்ளது.
    - 2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட டெல்லி-மும்பை விரைவுச்சாலையின் டெல்லி-வதோதரா பிரிவின் ஒரு பகுதியாக இது அமைந்துள்ளது.
- 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யவும், கடுமையான இணையவழி பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிமுகப் படுத்தவும் இங்கிலாந்து அரசு திட்டங்களை அறிவித்துள்ளதுடன் இந்த விதிகள் 2027 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தங்கள் குடும்பங்களை ஆதரிப்பதற்காக பணம் அனுப்பும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 16 அன்று சர்வதேச குடும்பப் பணம் அனுப்பும் நாள் (IDFR) கடைபிடிக்கப் படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Remittances for Rural Resilience, Entrepreneurship and Employment என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 முதல் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- இந்த விரிவாக்கம் தந்தை பெரியார் என்று அழைக்கப்படும் சமூக சீர்திருத்தவாதியான ஈ.வெ. ராமசாமியின் பிறந்தநாளில் செயல்படுத்தப்படும்.

- இத்திட்டம் தற்போது அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கி வருகிறது.
- முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் ஆய்வுக் கூட்டத்திற்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- தமிழ்நாட்டில் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு சத்தான காலை உணவை வழங்குவதையும் அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## தமிழக அரசின் வெள்ளை அறிக்கை 2026

### Fiscal strain

The report pointed out that the T.N. govt's revenue deficit has become structural, and the State is borrowing to fund current consumption rather than investment



| Indicator | Window start (2021-22) | Closing (2025-2026 Pre-AC) |
|---|---|---|
| Revenue deficit (₹ in crore) | 46,538 | 78,324 |
| Revenue deficit as % of GSDP | 2.25% | 2.22% |
| SoTR / GSDP (own-tax effort) | 5.93% | 5.45% |
| Outstanding liabilities / GSDP | 28.7% | 28.3% |
| Capital expenditure / GSDP | 1.79% | 1.44% |
| Committed expenditure / TRR | 60.4% | 64.4% |

Source: Tamil Nadu Budget documents

- மாநில அரசானது, 'தமிழ்நாட்டின் நிதி மேலாண்மை - 2021-22 முதல் 2025-26 ஆம் ஆண்டு வரையிலான பொது நிதிகளின் ஆய்வு' என்ற வெள்ளை அறிக்கையை வெளியிட்டது.
- இது, பொதுத்துறை நிறுவனங்களின் ஒருங்கிணைந்த கடனையும் சேர்த்து, தமிழ்நாட்டின் கடனை ₹13.18 லட்சம் கோடியாகக் குறிப்பிடுகிறது.
- 2025-26 ஆம் ஆண்டில் ₹10 லட்சம் கோடியாக உள்ள இந்தக் கடன் தொகையானது, சந்தைக் கடன்கள், நிறுவனக் கடன்கள் மற்றும் பொதுக் கணக்குப் பொறுப்புகள்

மூலம் மாநிலம் பெற்ற நேரடிக் கடன்களை மட்டுமே உள்ளடக்கியது என்றும், மாநிலம் உத்தரவாதம் அளிக்கும் அல்லது மறைமுகமாக ஆதரிக்கும் பொதுத்துறை நிறுவனங்கள், சட்டப்பூர்வ வாரியங்கள் மற்றும் சிறப்பு நோக்க நிறுவனங்களின் கடன்களை இது உள்ளடக்கவில்லை என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

❖ பொதுத்துறை நிறுவனங்களில், மின்சாரத் துறையே ₹2.47 லட்சம் கோடி கடனுக்கான மிகப்பெரிய ஒற்றை ஆதாரமாகத் தொடர்கிறது.

❖ எட்டு அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் நிலுவைக் கடன் ₹43,865 கோடியாகவும், தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் கழகத்தின் கடன் ₹27,181 கோடியாகவும் உள்ளது என அந்த அறிக்கை தெரிவித்தது.


❖ இந்தப் பொதுத்துறை நிறுவனங்களின் மொத்த நிலுவைக் கடன் ₹3.18 லட்சம் கோடியாக உள்ளது.

❖ 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் ஐந்து ஆண்டுகளில் மாநிலத்தின் நிலுவைக் கடன் கிட்டத்தட்ட இருமடங்காகியுள்ளது என்றும், இது ₹5.13 லட்சம் கோடியிலிருந்து 2026 ஆம் ஆண்டு மார்ச் 31, நிலவரப்படி சுமார் ₹10 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது என்றும் அந்த அறிக்கை கூறியது. கோவிட்-க்குப் பிந்தைய காலம் முழுவதும் கடன்-மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி விகிதம் உயர்ந்தே இருந்து, 2025-26 ஆம் ஆண்டில் 28.3% ஆக இருந்தது.

❖ வட்டி செலுத்துதல்கள் மொத்த வருவாய் வரவுகளில் சுமார் 23% மற்றும் மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் (SOTR) கிட்டத்தட்ட 35% ஆகியவற்றை எடுத்துக்கொள்கின்றன.

❖ 2025-26 ஆம் ஆண்டில் ₹67,050 கோடியாக உள்ள ஆண்டு வட்டிச் செலவு, ஆண்டு மூலதனச் செலவை விட ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு அதிகமாக உள்ளது.

❖ 2025-26 ஆம் ஆண்டின் முன்-உண்மை நிலவரக் கணிப்புகளின்படி, ₹78,324 கோடி வருவாய் பற்றாக்குறை ஏற்படும் எனத் தெரிகிறது. இது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 2.2%-க்குச் சமமாகும் என்பதோடு இது முழுமையான அளவில் இதுவரை பதிவானதிலேயே மிக உயர்ந்த அளவாகும், மேலும் கோவிட் ஆண்டு அளவை விடவும் அதிகமாகும்.




❖ மாநில அரசு, முதலீட்டிற்குப் பதிலாக நடப்பு நுகர்வுக்கு நிதியளிக்க கடன் வாங்குகிறது.

❖ மாநிலம் தனது சொந்த வரி விதிப்பு முயற்சி மூலம் திரட்டும் ஒவ்வொரு ரூபாயிலும் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான தொகை, கடந்த காலக் கடனைத் திருப்பிச்

செலுத்துவதற்கே நேரடியாகச் செல்கிறது.

- தமிழ்நாட்டின் வரி அல்லாத வருமானத்தில் ஏற்பட்டுள்ள "தேக்கநிலையின் மிகவும் குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டுகளில்" சுரங்க வருவாயும் ஒன்றாகும் என்று அந்த வெள்ளை அறிக்கை கூறியது.
- மாநிலத்தில் கிரானைட், சுண்ணாம்புக்கல், மணல், குவார்ட்ஸ், வெர்மிகுலைட் மற்றும் பலவகையான சிறு கனிமங்களின் "கணிசமான படிவுகள்" இருந்தன.
- சிறு கனிமங்கள் மீதான உரிமத்தொகை, வாடகை மற்றும் நாணய வெளியீட்டுக் கட்டணம் ஆகியவை சுரங்க வருவாய்க்குப் பங்களித்தன.
- மாநில வருவாய்-மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (SOTR-to-GSDP) விகிதம் 2021-22 ஆம் ஆண்டில் 5.93% ஆக இருந்து, 2025-26 ஆம் ஆண்டில் 5.45% ஆகக் குறைந்துள்ளது. சம்பளம், ஓய்வூதியம் மற்றும் வட்டி செலுத்துதல்கள் உள்ளிட்ட உறுதிசெய்யப்பட்ட செலவினங்கள், சக மாநிலங்களுடன் (மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் கர்நாடகா) ஒப்பிடும்போது மிக அதிகமாக உள்ளன.
- இது ₹1.25 லட்சம் கோடியிலிருந்து ₹1.89 லட்சம் கோடியாக உயர்ந்து, வருவாய் வரவுகளில் அதன் பங்கை சுமார் 60% இலிருந்து 64% ஆக அதிகரித்துள்ளதுடன் 11.8% என்ற அளவில், மூலதனச் செலவினத்திற்கும் மொத்தச் செலவினத்திற்குமான விகிதம், ஒப்பிடக்கூடிய மாநிலங்களிலேயே மிகக் குறைவாக உள்ளது.
- வருவாய் பற்றாக்குறையை பூஜ்ஜிய நிலைக்குக் கொண்டு வருவதையும், நிதிப் பற்றாக்குறையை 3% ஆகக் கட்டுப்படுத்துவதையும் ஒத்தி வைப்பதற்காக, 2003-ஆம் ஆண்டின் தமிழ்நாடு நிதிப் பொறுப்புச் சட்டம் இதுவரை எட்டு முறை திருத்தப்பட்டுள்ளது.
- 2031-ஆம் ஆண்டளவில் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 18.2% ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ள, அதிகரித்து வரும் முதியோர் மக்கள் தொகையையும் இந்த அறிக்கை எடுத்துக்காட்டியுள்ளது.
- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் மக்கள் தொகை கணிப்புகளின்படி, 2031-ஆம் ஆண்டளவில் முக்கிய மாநிலங்களிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக விகிதத்தில் முதியவர்கள் இருப்பார்கள்.
- இது, (மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக) இரண்டாவது பெரிய மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) அளவைக் கொண்டிருப்பதையும், பல்வகைப்பட்ட தொழில் மற்றும் சேவைப் பொருளாதாரத்தையும், ஒரு பெரிய முறைசார் துறை வரி அடிப்படையையும் தமிழ்நாடு கொண்டிருப்பதைக் குறிக்கிறது.
- மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR), மொத்த வருவாய் வரவுகளில் (TRR) சுமார் மூன்றில் இரண்டு பங்காக உள்ளது.
- மாநிலத்தின் “சொந்த வரி வருவாய் ஐந்து முக்கிய ஆதாரங்களில் இருந்து பெறப்படுகிறது”.
- அவை வணிக வரிகள் (சரக்கு மற்றும் சேவை வரி), பெட்ரோலியப் பொருட்களின் மீதான மதிப்புக்கூட்டு வரி (VAT), மாநில கலால் வரி மற்றும் மதுபானத்தின் மீதான VAT, முத்திரைகள் மற்றும் பதிவு, மோட்டார் வாகன வரி மற்றும் பிற வரிகள் ஆகும்.
- பரந்த வணிக வரிகளுக்குள், சரக்கு மற்றும் சேவை வரி (GST) சுமார் 53% ஆகவும்; மதுபானத்தின் மீதான VAT 28% ஆகவும்; மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் மீதான VAT 19% ஆகவும் இருந்தது.
- கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் டீசல் மற்றும் பெட்ரோல் நுகர்வு வளர்ச்சிப் போக்கு, ஆண்டுக்கு சுமார் 7% ஆக இருந்த உண்மையான மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வளர்ச்சி விகிதத்தை விட மிகவும் குறைவாக உள்ளது.
- தமிழ்நாட்டின் பெட்ரோல், டீசல் நுகர்வு தேக்க நிலையை அடைந்து கொண்டிருந்தது.

- மேம்பட்ட எரிபொருள் செயல்திறன், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) மற்றும் மின்சார வாகனங்களின் பயன்பாடு அதிகரிப்பு, மற்றும் சரக்கு போக்குவரத்து முறைகளில் ஏற்பட்ட மாற்றம் ஆகியவையே இந்த வளர்ச்சிக்குக் காரணம் என அந்த ஆவணம் குறிப்பிட்டது.

# தேசியச் செய்திகள்

## VB-GRAM-G ஊரக முன்னெடுப்பு

- ₹1.25 லட்சம் கோடி மதிப்பிலான விக்சித் பாரத்-கிராம்ஜி (VB-GRAM-G) ஊரக மேம்பாட்டு முன்னெடுப்பை மத்திய அரசு அறிவித்துள்ளதுடன் இது 2026 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் நடைமுறைக்கு வரும்.
- இந்தியா முழுவதும் ஊரக வேலைவாய்ப்பு, தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் கிராம மேம்பாட்டை ஊக்குவிப்பதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இதற்கான இடைக்கால ஒதுக்கீடாக ₹95,692.31 கோடியை அரசாங்கம் வெளியிட்டு உள்ளது என்பதோடு மேலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் (MGNREGA) கீழ் ₹30,000 கோடியை ஏற்கனவே ஒதுக்கியுள்ளது.
- வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும், ஊரக சொத்துக்களை உருவாக்குவதற்கும் ஆதரவாக இந்த நிதி சுமார் 2.80 லட்சம் கிராம ஊராட்சிகளைச் சென்றடையும்.
- 100% மின்னணு-வாடிக்கையாளர் அறிதல் (e-KYC), நேரடிப் பலன் பரிமாற்றம் (DBT), முக அங்கீகாரம் மற்றும் சரியான நேரத்தில் ஊதியம் வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்யுமாறு மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.
- இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்த தேசிய ஊரக மேம்பாட்டு மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.





## சிசுபால் தீர்ப்பு 2026

- சிசுபால் @ சிஷ் ராம் எதிர் சுர்ஜீத் (2026) வழக்கில், மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு வழக்குகளில் இல்லத்தரசிகள் செய்யும் ஊதியமில்லா வீட்டு

வேலைகளுக்கான சுயாதீனமான பொருளாதார மதிப்பை உச்ச நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.

- இல்லத்தரசிகள் செய்யும் வீட்டு வேலைகள் முறையான பண வருமானத்தை ஈட்டவில்லை என்பதற்காக மட்டுமே அதற்குப் பொருளாதார மதிப்பு இல்லை என்று கருதக் கூடாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- மோட்டார் வாகன விபத்து மரண வழக்குகளில் இழப்பீட்டைத் தீர்மானிக்கும் போது, இல்லத்தரசிகளுக்கான குறைந்தபட்ச கற்பனை வருமானமாக மாதம் ₹30,000 ஆக நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது.
- இல்லத்தரசி இறக்க நேரிடும் வழக்குகளில் இழப்பீடு வழங்க "வீட்டுப் பராமரிப்பு இழப்பு" என்ற தனிப் பிரிவை நீதிமன்றம் உருவாக்கியது.
- இதுபோன்ற வழக்குகளில், தீர்ப்பாயங்களும் நீதிமன்றங்களும் "வீட்டுப் பராமரிப்பு இழப்பு" என்ற பிரிவின் கீழ் கூடுதலாக மாதம் ₹30,000 வழங்க வேண்டும்.
- இழப்பீடானது மிகவும் குறைவாக கணக்கிடப்படும் கற்பனை வருமானத்தின் அடிப்படையில் அமையும் போது இல்லத்தரசிகள் எதிர்கொள்ளும் பாதகமான நிலையைச் சரி செய்வதற்கான குறைந்தபட்ச அளவுகோல் இந்த ₹30,000 என நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.
- குடும்பத்திற்கு நேரடியாகப் பணப் பங்களிப்பைச் செய்யாத இல்லத்தரசிகளுக்கான "மாற்று" மாத வருமானம் என இத்தொகையை நீதிமன்றம் விவரித்துள்ளது.
- ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் இந்தத் தொகை 10% என்ற ஒட்டுமொத்த அடிப்படையில் உயர்த்தப்பட வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.
- இல்லத்தரசி வேலைக்குச் செல்பவராகவும், நிரூபிக்கப்பட்ட வருமானத்தைக் கொண்டவராகவும் இருந்தால், "வீட்டுப் பராமரிப்பு இழப்பு" என்பதன் கீழான இழப்பீடு நிரூபிக்கப்பட்ட வருமானத்துடன் கூடுதலாக வழங்கப்படும்.
- குடும்பங்களை ஆதரிப்பதாலும், நாட்டின் மனித மூலதன மேம்பாட்டிற்கு கணிசமான பங்களிப்பை வழங்குவதாலும் இல்லத்தரசிகளை "தேசத்தை உருவாக்குபவர்கள்" என இத்தீர்ப்பு விவரிக்கிறது.
- சமைத்தல், சுத்தம் செய்தல், கவனித்துக்கொள்ளுதல் மற்றும் குழந்தைகளை வளர்த்தல் போன்ற அன்றாட வீட்டுச் செயல்பாடுகள், ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு ஆதரவளிப்பதோடு பொருளாதார உற்பத்தித் திறனையும் சாத்தியமாக்குகிறது என நீதிமன்றம் கவனித்தது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) போன்ற வழக்கமான பொருளாதாரக் குறியீடுகளில் இந்தப் பங்களிப்புகள் பொதுவாகப் பிரதிபலிப்பதில்லை என்பதையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.
- இல்லத்தரசிகள் இந்தியாவின் "மனித மூலதனத்தின்" சிற்பிகள் என்றும், தொழில் வல்லுநர்கள் மற்றும் எதிர்காலத் தலைமுறையினரின் வெற்றிக்கு அடித்தளமிடுகிறார்கள் என்றும் அமர்வு கூறியது.
- இல்லத்தரசிகள் செய்யும் பொருளாதார, சமூக மற்றும் தேசத்தை உருவாக்கும் பங்களிப்புகளைக் கண்டிப்பான எண்கணிதக் கணக்கீடுகளால் முழுமையாக அளவிட முடியாது என்பதை இத்தீர்ப்பு ஏற்றுக்கொண்டது.
- ₹30,000 என்ற தொகையை நிர்ணயிக்க எந்தவொரு குறிப்பிட்ட கணித அல்லது அனுபவபூர்வமான அடிப்படையையும் இத்தீர்ப்பு வழங்கவில்லை.
- மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோரிக்கைகள் பல ஆண்டுகளாக வழக்குகளில் சிக்கித் தவிப்பதாகவும், இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நிவாரணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் நீதிமன்றம் கவனித்தது.

- மோட்டார் வாகன விபத்து உரிமைகோரல் தீர்ப்பாயங்களில் (MACTs) இதுபோன்ற வழக்குகளின் சராசரி நிலுவைக் காலம் சுமார் ஆறு ஆண்டுகள் என்றும், உயர் நீதிமன்றங்களில் எட்டு ஆண்டுகள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.
- இழப்பீட்டு மேல்முறையீடுகள் உயர் நீதிமன்றங்களில் நான்கு ஆண்டுகளுக்கு மேல் நிலுவையில் இருக்கக் கூடாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- உண்மையான காரணங்களுக்காக மட்டுமே வாய்தாக்கள் வழங்கப்பட வேண்டும் என்றும், தேவையற்ற தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் அது வலியுறுத்தியது.
- நீண்டகால தாமதங்கள் 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் நலன் சார்ந்த நோக்கத்தையே தோற்கடிக்கின்றன என நீதிமன்றம் கருதியது.
- பழைய மோட்டார் விபத்து இழப்பீட்டு மேல்முறையீடுகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறும், வழக்குகளை விரைவாக முடித்துவைப்பதை உறுதி செய்யக் கூடுதல் அமர்வுகளின் அவசியத்தை மதிப்பிடுமாறும் அனைத்து உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளுக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டது.




# சர்வதேசச் செய்திகள்

## பிரிக்ஸ் வேளாண்மை கட்டமைப்பு

- மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் இந்தியாவின் தலைமையின் கீழ் நடைபெற்ற 16-வது பிரிக்ஸ் வேளாண்மை அமைச்சர்கள் கூட்டத்தில் 'பிரிக்ஸ் இந்தூர் பிரகடனம்' ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இக்கூட்டமானது "மீள்திறன், புத்தாக்கம், ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மைக்கான கட்டமைப்பு" என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- இப்பிரகடனம் உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து, வேளாண் வர்த்தகம், பருவ நிலையைத் தாங்கும் திறனுடைய வேளாண்மை மற்றும் டிஜிட்டல் வேளாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- விவசாயிகளின் விதை உரிமைகள் மற்றும் உள்நாட்டு அறிவாற்றலைப் பாதுகாப்பதற்காக 'விதை அமைப்புகளில் விவசாயிகளின் உரிமைகளுக்கான உலகளாவிய மன்றத்தை' தொடங்க இது முன்மொழிகிறது.
- இது முன்மொழியப்பட்ட 'பிரிக்ஸ் தானிய பரிமாற்றத்தை' ஆதரிக்கிறது. மேலும்,

விதைகள் மற்றும் வேளாண் உள்ளீடுகளில் ஒத்துழைப்பிற்காக BRICS AGRIN (வேளாண் இடு பொருட்கள், மரபணு வளங்கள் மற்றும் தகவல் வலையமைப்பு) என்ற அமைப்பைத் தொடங்குவதையும் இது ஆதரிக்கிறது.

- வேளாண்மையில் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை (DPI) விரிவுபடுத்தவும், டிஜிட்டல் வேளாண்மைக்கான பிரிக்ஸ் வலையமைப்பை நிறுவவும் இது அழைப்பு விடுக்கிறது. இதை ஆரம்பத்தில் டெல்லி இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT Delhi) ஒருங்கிணைக்கும்.




## 52-வது G7 உச்சி மாநாடு 2026




- பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மேக்ரான் தலைமையில் 52-வது G7 உச்சிமாநாடு பிரான்சின் ஏவியன்-லெஸ்-பெய்ன்ஸ் நகரில் 2026 ஆம் ஆண்டு ஜூன் 15 அன்று தொடங்கியது.
- "முக்கிய சர்வதேச சவால்களை எதிர்கொள்ள ஒன்றாக இணைந்து பணியாற்றுதல்" என்பது இந்த உச்சிமாநாட்டின் கருத்துருவாகும்.
- G7 என்பது கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய ஏழு வளர்ந்த பொருளாதார நாடுகளின் வருடாந்திர மன்றமாகும்.
- உலகளாவிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், புவிசார் அரசியல் நெருக்கடிகள், குழந்தைகளின் பிரச்சனைகள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் சட்டவிரோத

பணப் புழக்கங்கள் குறித்து இந்த உச்சிமாநாட்டில் விவாதிக்கப்படும்.

- G7 முதலில் 1975 ஆம் ஆண்டில் G6 (பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா) ஆக உருவாக்கப்பட்டது. பின்னர் 1976 ஆம் ஆண்டில் கனடா இணைந்ததையடுத்து இது G7 ஆக உருவானது.

## 13-வது பிரிக்ஸ் நகரமயமாக்கல் மன்றம்

- அனைவரையும் உள்ளடக்கிய, நிலையான, மீள்திறன் கொண்ட மற்றும் மக்கள் மைய நகர மேம்பாட்டிற்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், புதுடெல்லியில் நடைபெற்ற 13-வது பிரிக்ஸ் நகரமயமாக்கல் மன்றம் 'நகர்ப்புற அமைச்சர்களின் பிரகடனத்தை' ஏற்றுக்கொண்டதுடன் முடிவடைந்தது.
- இந்தியாவின் பிரிக்ஸ் தலைமையின் கீழ் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் இந்த மன்றம் கூட்டப்பட்டது.
- "மக்களுக்கான நகரங்கள்: அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் மீள்திறன் கொண்ட நகர்ப்புற எதிர்காலத்திற்கான பிரிக்ஸ் ஒத்துழைப்பு" என்பது இந்த மன்றத்தின் கருத்துருவாகும்.
- நகர்ப்புறச் சேவைகளுக்குச் சமமான அணுகலை உறுதி செய்வதை, குறிப்பாக விளிம்புநிலை குழுக்களுக்கு வழங்குவதை இப்பிரகடனம் வலியுறுத்தியது
- இதில் பிரேசில், சீனா, எகிப்து, எத்தியோப்பியா, இந்தோனேசியா, ஈரான், ரஷ்யா, தென்னாப்பிரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் பங்கேற்றன.
- மலிவுவிலை வீட்டுவசதி, குடிசைப்பகுதி மேம்பாடு, பொதுப் போக்குவரத்து, பருவ நிலை தழுவல், நீர் பாதுகாப்பு, திடக்கழிவு மேலாண்மை, நகர்ப்புற மறுமலர்ச்சி, நகராட்சி சீர்திருத்தங்கள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த நகர்ப்புற நிர்வாகம் ஆகியவை குறித்து விவாதங்கள் நடைபெற்றன.





# மாநிலச் செய்திகள்

## மாணவர் ஊட்டச்சத்துத் திட்டம் - தெலுங்கானா

- கோடை விடுமுறைக்குப் பின் பள்ளிகள் திறக்கப்பட்டதையடுத்து, தெலுங்கானா அரசு தனது 'காலை உணவு மற்றும் பால் வழங்கும் திட்டத்தை' தொடங்கியுள்ளது.
- இத்திட்டமானது மாநிலம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகள் மற்றும் இளையோர் கல்லூரிகளில் மழலையர் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களை

உள்ளடக்கியது.

- ❖ மாநில அரசு இதற்காக ஆண்டுதோறும் ₹720 கோடி ஒதுக்கியுள்ளது. இதில் காலை உணவுக்கு ₹540 கோடியும், பால் மற்றும் கேழ்வரகு மால்ட் விநியோகத்திற்காக ₹180 கோடியும் அடங்கும்.
- ❖ அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் சுமார் 29 லட்சம் மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் இத்திட்டம் செயல்பட உள்ளது.
- ❖ இத்திட்டத்தின் முதல் கட்டமானது எட்டு மாவட்டங்களில் உள்ள 1,302 கல்வி நிறுவனங்களை (1,269 அரசுப் பள்ளிகள் மற்றும் 33 இளையோர் கல்லூரிகள்) உள்ளடக்கியதுடன், இதன் மூலம் சுமார் 1.44 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★